## முன்னுரிமைப் பிரிவிற்கு கடன் வழங்குதல்- இலக்குகள் மற்றும் வரைவிலக்கணம்

1. **முன்னுரிமைப் பிரிவின் கீழ் உள்ளவைகள்**
    a. வேளாண்மை
    I. குறு, சிறு மற்றும் நடுத்தரநிறுவனங்கள்
    II. ஏற்றுமதிக் கடன்கள்
    III. கல்வி
    IV. வீட்டுவசதிக் கடன்
    V. சமுதாயக் கட்டமைப்பு
    VI. புதுப்பிக்கத்தக்க சக்தி
    VII. இதரவகை

மேற்குரிப்பிட்டவற்றின்கீழ் உள்ள தகுதியான செயல்பாடுகலின் விவரங்கள் பாரா 3 இல் தரப்பட்டுள்ளன.

2. **முன்னுரிமைப் பிரிவிற்கு உரிய இலக்குகள் மற்றும் உப இலக்குகள்**
    (i) நகர்ப்புறக் கூட்டுறவு வங்கிகள் முன்னுரிமைப் பிரிவிற்கு வழங்கும் கடன்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள இலக்குகள் மற்றும் உப இலக்குகள் பின்வருமாறு. இவை சம்பளம் ஈட்டுபவர்களின் கூட்டுறவு வங்கிகளுக்குப் பொருந்தாது.

| | |
|---|---|
| **மொத்த முன்னுரிமைப் பிரிவு** | "சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கடன்" (ANBC) அளவில் அல்லது "இருப்பு நிலைக்கு வெளியே படுநிலையிலுள்ளவற்றிற்கு சமமானகடன் (கீழே பாரா(ii) இல் உள்ளபடி) அளவில் 40 சதவிகிதம் (இதில் எது அதிகமோ அது) |
| **மொத்த வேளாண்மை** | இலக்கு ஏதுமில்லை |
| **குறு நிறுவனங்கள்** | சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கடன்" (ANBC) அளவில் அல்லது "இருப்பு நிலைக்கு வெளியே படுநிலையிலுள்ளவற்றிற்கு சமமானகடன் அளவில் 7.5 சதவிகிதம் (இதில் எது அதிகமோ அது) |
| **நலிவுற்ற பிரிவினருக்கு கடன்கள்** | சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கடன்" (ANBC) அளவில் அல்லது "இருப்பு நிலைக்கு வெளியே படுநிலையிலுள்ளவற்றிற்கு சமமானகடன் அளவில் 10 சதவிகிதம் (இதில் எது அதிகமோ அது) |

(ii) முன்னுரிமைப் பிரிவின் இலக்கு/உப இலக்குகளின் சாதனைகளின் கணக்கீடு என்பது முந்தைய ஆண்டின் மார்ச் 31 ஆம் தேதியில் இருந்த "சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கடன்" (ANBC) அளவில் அல்லது "இருப்பு நிலைக்கு வெளியே படுநிலையிலுள்ளவற்றிற்கு சமமானகடன் அளவில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதம் (இதில் எது அதிகமோ அது) என்பதன் அடிப்படையில் கணக்கிடப்படும். முன்னுரிமைப் பிரிவுக் கடன் வழங்கலைப் பொறுத்தவரை ANBC பின்வருமாறு கணக்கிடப்படும். மொத்தக் கடன் தொகையிலிருந்து இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் இதர அனுமதிக்கப்பட்ட நிதியியல் நிறுவனங்களிடம் மறு கழிவு செய்யப்பட்ட பில்களின் தொகை கழிக்கப்படும். அத்துடன் ஆகஸ்ட் 30,2007 க்குப் பின்னர் SLR ற்காக அனுமதிக்கப்பட்ட பத்திரங்களில் முதிர்வு வரை வைத்திருக்கும் வகையில் (HTM) செய்யப்பட்ட முதலீடுகள் கூட்டப்படும். இருப்பு நிலைக்கு வெளியே படுநிலையிலுள்ளவற்றிற்கு சமமானகடன் அளவைக் கணக்கீடு செய்ய நடப்பில் உள்ள முறையையே பயன்படுத்தலாம். வங்கிகளுக்கு இடையே படு நிலையில் உள்ளவை மற்றும் இருப்பு நிலை அறிக்கைக்கு வெளியே வங்கிகளுக்கு இடையே படு நிலையில் உள்ளவை இதன் பொருட்டு கணக்கில் எடுத்துக் கொள்ளப் படமாட்டாது.

(iii) ANBC இலிருந்து முற்காப்பு இருப்பு, சேகரமான வட்டி போன்றவைகளைக் கழிக்கக் கூடாது.

(iv) மிகையாக உள்ள FCNR(B)/NRE டெபாசிட்டுகள் (UBD.BPD.(PCB).CIR.No.5/13.01.000/2013-14 dated August 27, 2013 & UBD.BPD.(PCB).CIR.No.72/13.01.000/2013-14 dated June 11, 2014 இல் குறிப்பிட்டபடி, CRR/SLR தேவைகளுக்கு விலக்கு அளிக்கப்பட்டவை) மீது இந்திய நாட்டில் வழங்கப்படும் கடன்கள், அவை திரும்ப செலுத்தப்படும் காலம் வரை ANBC இலிருந்து கழிக்கப்படும். முன்னுரிமைப் பிரிவுக் கடன் வழங்கல் இலக்கிற்காக இவ்வாறு கணக்கீடு செய்யப்படும்.

## III. முன்னுரிமைப் பிரிவின் கீழ் தகுதி பெறும் வகைகளைக் குறித்த விளக்கம்.

1. வேளாண்மை

தற்போது நடப்பிலிருக்கும் நேரடியான மற்றும் மறைமுகமான விவசாயம் என்று வேறுபடுத்திப் பார்ப்பது கைவிடப்படும்.விவசாயத்திற்கு கடன் என்பது மறு வரையறை செய்யப்பட்டு பின்வருவனவற்றையும் உள்ளடக்கியதாகிறது. (i) **பண்ணைக் கடன் –இதில் குறுகிய கால** பயிர்க் கடன் மற்றும் விவசாயத்திற்கான நடுத்தர /நீண்ட கால கடனுதவிகள் (ii) வேளாண் உள்கட்டமைப்பு (iii) தொடர்புடைய நடவடிக்கைகள். இந்த மூன்று வகைகளுக்கு உட்பட்ட தகுதி வாய்ந்த நடவடிக்கைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | | | |
|---|---|---|---|
| 1.1 | **பண்ணைக் கடன்** | A. | தனிப்பட்ட விவசாயிகளுக்குக் கடன்கள் (சுய உதவிக் குழுக்கள் அல்லது கூட்டுப் பொறுப்புக் குழுக்கள், அதாவது கூட்டாக விவசாயிகளுக்கு அளிக்கப்படும் கடன்கள் உட்பட- இவை பற்றிய தனித் தகவல்கலை வங்கிகள் வைத்திருக்க வேண்டும்.) இவர்கள் நேரிடையாக விவசாயம் அல்லது தொடர்புடைய நடவடிக்கைகளில் அதாவது.. பால் பண்ணை, மீன் வளரப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு ஈடுபட வேண்டும். இவைகளில் பின்வரும் கடன் வகைகளும் அடங்கும். |
| | | | (i) விவசாயிகளுக்கு பயிர்க் கடன்கள்- பாரம்பரிய தோட்டப்பயிர்கள், பாரம்பரியமல்லாதவை, தோட்டக்கலை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள். |
| | | | (ii) விவசாயத்திற்காக மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக நடுத்தர /நீண்ட கால கடனுதவிகள் (வேளாண் இடுபொருட்கள்,எந்திர சாதனங்கள் வாங்குதல்,நீர்ப்பாசன வசதிகள், பண்ணையில் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் தொடர்புடைய நடவடிக்கைகள் இவற்றிற்கான மேம்பாட்டு கடன்கள். |
| | | | (iii) அறுவடைக்கு முன் மற்றும் பின்னர் உள்ள செயல்பாடுகளுக்காக கடன்கள் :- மருந்து தெளித்தல், களை எடுத்தல்,அறுவடை, தாள் அடித்தல், பிரித்தல், மகசூலை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லுதல் |
| | | | (iv) விவசாயிகளுக்கு ரூ.50 லட்சம் வரை விளைபொருள் மீது பிணையம் அல்லது அடமானம் அல்லது கிடங்குச் சீட்டு அச்சாரத்தின் பேரில் 12 மாத காலத்திரு மிகாமல் வழங்கப்படும் கடன்கள் |
| | | | (v) நிறுவன அமைப்புகளல்லாதவர்களிடமிருந்து வாங்கிய கடன்களை அடைக்க முடியாமல் நொடித்துப் போன விவசாயிகளுக்கு வழங்கப்படும் கடன்கள் |
| | | | (vi) விவசாயம் செய்வதற்காக சிறு மற்றும் குறு விவசாயிகள் நிலம் வாங்க அளிக்கப்படும் கடன்கள் |
| | | | B. -கார்ப்பரேட் விவசாயிகள், விவசாயிகளின் உற்பத்தியாளர் நிறுவனங்கள்/தனிப்பட்ட விவசாயிகள் நிறுவனங்கள் மற்றும் விவசாய மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளில் நேரடியாக ஈடுபட்டுள்ள கூட்பாளி நிறுவனங்கள்: - பால் பண்ணை, மீன் வளரப்பு, கால்நடை வளர்ப்பு, கோழி வளர்ப்பு, தேனீ வளர்ப்பு, பட்டுப்புழு வளர்ப்பு இவற்றிற்கு மொத்தமாக |

| | | | |
|---|---|---|---|
| | | | ஒரு கடனாளிக்கு ரூ.2 கோடி வரை. இவைகளில் பின்வரும் கடன் வகைகளும் அடங்கும். |
| | | | (i) விவசாயிகளுக்கு பயிர்க் கடன்கள்- பாரம்பரிய தோட்டப்பயிர்கள், பாரம்பரியமல்லாதவை, தோட்டக்கலை மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகள். |
| | | | (ii) விவசாயத்திற்காக மற்றும் தொடர்புடைய நடவடிக்கைகளுக்காக நடுத்தர /நீண்ட கால கடனுதவிகள் (வேளாண் இடுபொருட்கள்,எந்திர சாதனங்கள் வாங்குதல்,நீர்ப்பாசன வசதிகள், பண்ணையில் மேம்பாட்டுக்கான நடவடிக்கைகள் தொடர்புடைய நடவடிக்கைகள் இவற்றிற்கான மேம்பாட்டு கடன்கள். |
| | | | (iii) அறுவடைக்கு முன் மற்றும் பின்னர் உள்ள செயல்பாடுகளுக்காக கடன்கள் :- மருந்து தெளித்தல், களை எடுத்தல்,அறுவடை, தாள் அடித்தல், பிரித்தல், மகசூலை வெளியிடங்களுக்கு எடுத்துச் செல்லுதல் |
| | | | (iv) விவசாயிகளுக்கு ரூ.50 லட்சம் வரை விளைபொருள் மீது பிணையம் அல்லது அடமானம் அல்லது கிடங்குச் சீட்டு அச்சாரத்தின் பேரில் 12 மாத காலத்திரு மிகாமல் வழங்கப்படும் கடன்கள் |
| 1.2 | வேளாண் உள் கட்டமைப்பு | (i) | சேமிப்பு கிடங்குகளைக் கட்ட (கிடங்கு, சந்தைத் திடல்கள், பண்டக சாலை,பதனக் குழி, குளிர் பதன வசதிகள் உட்பட) எந்த பகுதியாக இருந்தாலும், விளைபொருட்களை பாதுகாத்து சேமித்து வைக்கப் பயன்படும் ஏற்பாட்டு வசதிகள் |
| | | (ii) | மண்வளப் பாதுகாப்பு, நீர் நிலை மேம்பாடு. |
| | | (iii) | பயிர் மெய்மை வளர்ப்பு, வேளாண் உயிரி தொழில் நுட்பம், விதை நேர்த்தி, இயற்கை உரங்கள் மற்றும் பூச்சிக் கொல்லிகள், நுண்ணுயிர், கலப்பு உரங்கள் உற்பத்தி. |
| | | | மேற்குறிப்பிட்டவற்றிற்கு ஒட்டு மொத்தமாக ஒரு கடனாளிக்கு வங்கி முறைமையிலிருந்து அனுமதிக்கப்பட்ட கடன் வரம்பு ரூ.100 கோடி வரை பொருந்தும். |
| 1.3 | துணை நடவடிக்கைகள் | (i) | வேளாண் பயிற்சிக் கூடங்கள், வேளாண் வணிக மையங்கள் அமைத்திடக் கடன்கள் |
| | | (ii) | உணவு மற்றும் பதனப்படுத்துதலுக்கு கடன்கள். ஒட்டு மொத்தமாக ஒரு கடனாளிக்கு வங்கி முறைமையிலிருந்து அனுமதிக்கப்பட்ட கடன் வரம்பு |

| | | | |
|---|---|---|---|
| | | | ரூ.100 கோடி வரை. |
| | | (iii) | டிராக்டர்கள், புல்டோசர்கள், ஆழ் துளைக் கிணறு தோண்டும் எந்திர சாதனங்கள்,தாளடிக்கும் எந்திரங்கள், போன்றவற்றை விவசாய நோக்கங் களுக்காக ஒப்பந்தத்தின் பேரில் அளித்திடும் நபர்கள், நிறுவனங்கள், இதர அமைப்புகளுக்கு வழங்கப்படும் கடன்கள். |

குறிப்பு :

**சிறு மற்றும் குறு விவசாயிகள் என்ற வகையில் பின்வரும் விவசாயிகள் அடங்குவர்**

- ஒரு ஹெக்டர் வரை சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் குறு விவசாயிகள் என்று கருதப்படுவர். ஒரு ஹெக்டருக்கும் அதிகமாக இரண்டு ஹெக்டர் வரை சொந்த நிலம் வைத்திருப்பவர்கள் சிறு விவசாயிகள் என்று கருதப்படுவர்.

- சொந்த நிலமற்ற விவசாயக் கூலிகள், குத்தகை சாகுபடிதாரர்கள், வாக்கு குத்தகை விவசாயிகள், பகுத்துப் பயிர் செய்வோர்.

## 2. குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் (MSMEs)

**2.1** செப்டம்பர் 09, 2006 தேதியிட்ட குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவன அமைச்சகம்வெளியிட்ட S.O.1642(E)-யில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, தொழில் மற்றும் எந்திர சாதனங்கள் / உற்பத்தி சாதனங்கள் / சேவை நிறுவனங்கள் ஆகியவற்றில் செய்யப்படும் முதலீடுகளுக்கான வரையறை பின்வருமாறு:

| **தொழில் துறை** | |
|---|---|
| **நிறுவனங்கள்** | **எந்திர சாதனங்களில் முதலீடு** |
| குறு நிறுவனங்கள் | ரூ. 25 லட்சத்திற்கு மிகாமல் |
| சிறு நிறுவனங்கள் | ரூ. 25 லட்சத்திற்கும் அதிகமாக ஆனால் ரூ. 5 கோடிக்கு மிகாமல் |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ. 5 கோடிக்கு அதிகமாக ஆனால் ரூ. 10 கோடிக்கு மிகாமல் |
| **சேவைத் துறை** | |
| **நிறுவனங்கள்** | **சாதனங்களில் முதலீடு** |
| குறு நிறுவனங்கள் | ரூ. 10 லட்சத்திற்கு மிகாமல் |
| சிறு நிறுவனங்கள் | ரூ. 10 லட்சத்திற்கு அதிகமாக ஆனால் ரூ. 2 கோடிக்கு மிகாமல் |
| நடுத்தர நிறுவனங்கள் | ரூ. 2 கோடிக்கு அதிகமாக ஆனால் ரூ. 5 கோடிக்கு மிகாமல் |

தொழில் உற்பத்தி மற்றும் சேவைத் துறைகளைச் சார்ந்த, குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்குப் பின்வரும் கொள்கைக்கு உட்பட்டு வழங்கப்படும் வங்கிக் கடன்கள் முன்னுரிமைப் பிரிவுக் கடன்களாக வகைப்படுத்த தகுதி வாய்ந்தவை ஆகும்.

## 2.2 தொழில் உற்பத்தி நிறுவனங்கள்

தொழில் (மேம்பாடு மற்றும் ஒழுங்க்குபடுத்துதல்) சட்டம் 1951-ன் முதல் பட்டியலில் இடம்பெற்றுள்ள மற்றும் அவ்வப்போது அரசால் அறிவிக்கப்படும் தொழில் நிறுவனங்கள் சார்ந்த பொருட்களின் உற்பத்தி மற்றும் ஆக்கத்தில் ஈடுபடும் குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் தொழில் மற்றும் எந்திர சாதனங்களில் செய்திடும் முதலீடுகளின் அளவைப் பொறுத்து அவை தொழில் உற்பத்தி நிறுவனங்கள் என்று வகைப்படுத்தப்படும்.

## 2.3 சேவை நிறுவனங்கள்

குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மேம்பாட்டு சட்டம், 2006ல் குறிப்பிட்டுள்ளபடி, முக்கிய சாதனங்களில் முதலீடு செய்து சேவை செய்வதில் ஈடுபட்டுள்ளகுறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் அனைத்து வங்கிக் கடன்கள்.

## 2.4 காதி மற்றும் கிராமத் தொழில் நிறுவனங்கள் (KVI)

காதி மற்றும் கிராமத் தொழில் துறையின் கீழ் உள்ள நிறுவனங்களுக்கு வழங்கப்படும் அனைத்துக் கடன்களும் முன்னுரிமைப் பிரிவில் குறு நிறுவனங்களுக்கானஉபஇலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள7.5 சதவீதத்தின் கீழ் வகைப்படுத்த தகுதி வாய்ந்தவையாகும்.

## 2.5 குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்களுக்கான இதர நிதிஉதவிகள்

(i) கிராமிய மற்றும் கைத்தொழில் நிறுவனங்கள், கைவினைஞர்களுக்கு இடு பொருள்கள் வழங்குதல் மற்றும் அவர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் போன்றவற்றில் ஈடுபட்டு உதவிடும் அமைப்புகளுக்கு வழங்கப்படும் கடன்கள். இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்கள் / நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் சட்ட அமைப்பு ரீதியாக வங்கிகள் கடனுதவி வழங்க முடியாத நிறுவனங்கள் மேற்குறிப்பிட்ட “அமைப்புகள்“ கீழ் வராதவையாகும். .

(ii) ஏப்ரல் 8, 2015-க்குப் பின்னர், பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா (PMJDY) திட்டத்தின் கீழ் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் வழங்கிடும் ரூ. 5000/- வரையிலான மிகைப்பற்று (Overdraft) கடன் வசதிகள். ஆனால் இத்தகு கடன் வசதிகளைப் பெறும் கடனாளியின் குடும்ப ஆண்டு வருமானம்

கிராமப்புறமானால் ரூ. 1,00,000/-ற்கு மிகாமலும், கிராமப்புறம் அல்லாத பகுதிகளானால் ரூ.1,60,000/-ற்கு மிகாமலும் இருக்க வேண்டும். குறு நிறுவனங்களுக்கு வழங்கப்படும் கடன் இலக்கிற்கு இத்தகு கடனுதவிகள் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**2.6** குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள், முன்னுரிமைப் பிரிவின் கீழ் அதே தகுதியில் நீடிக்காமல், மேலும் வளர்ந்திட வேண்டும் என்ற கருத்தால், அவை குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் என்ற வரையறையைத் தாண்டி வளர்ந்த பின்னரும், 3 ஆண்டுகளுக்கு அவை முன்னுரிமைப் பிரிவிற்கான சலுகையைத் தொடர்ந்து பெற்றிடும்.

**3. ஏற்றுமதிக் கடன்கள்**

ஏற்றுமதி கடன்கள் பின்வரும் வகைகளில் வழங்கப்படுமானால் அவை முன்னுரிமைப் பிரிவிற்கு உரியனவாகக் கருதப்படும்.

**3.1** ஏபரல் 1, 2017 ற்குப் பின்னர் வங்கிகள் தமது “சரிசெய்யப்பட்ட நிகர வங்கிக் கடன்” (ANBC) தொகையில் 2% அல்லது “இருப்பு நிலைக்கு வெளியே படுநிலையிலுள்ளவற்றிற்கு சமமானகடன் அளவு“(இதில் எது அதிகமோ அது) வழங்கிடும் கூடுதல் (கடந்த ஆண்டின் இதே தேதியில் ஒப்பிட்டு) ஏற்றுமதி கடன். இதற்கான வரம்பு பின்வருமாறு: ரூபாய் 100 கோடி வரை மொத்த வியாபாரம் செய்திடும் நிறுவன கடனாளி ஒருவருக்கு ரூபாய் 25 கோடி வரை அனுமதிக்கப்பட வரம்பிற்குள் வழங்கப்படும் ஏற்றுமதி கடன்.

**3.** ரூபாயில் அல்லது அந்நியச் செலாவணியில் வழங்கப்படும் ஏற்றுமதிக் கடன்கள் மற்றும் ஏற்றுமதியாளர்களுக்கு உரிய வாடிக்கையாளர் சேவை குறித்து, வங்கிகள் ஒழுங்குபடுத்தும் துறை வெளியிட்டுள்ள முதன்மைச் சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளபடி**,** கப்பலில் சரக்கேற்றுவதற்கு முன், மற்றும் அதன்பின் வழங்கப்படும் ஏற்றமதிக் கடன்கள் (“இருப்பு நிலை அறிக்கைக்கு வெளியே படுநிலையில் உள்ளவற்றைத் தவிர்த்து) ஏற்றுமதிக் கடனுதவிகள் என்ற பிரிவின் கீழ் அடங்கும்.

**4. கல்வி**

தனிநபர்களுக்கு கல்விக்காக (தொழில் பயிற்சிகள் உட்பட) ரூ. 10 லட்சம் வரை (அனுமதிக்கப்பட்ட தொகை எதுவாயினும்) முன்னுரிமைப் பிரிவுக் கடனாகக் கருதப்படும்.

**5. வீட்டுவசதிக் கடன்**

(i) தனிநபர்களுக்கு எந்த இடமாக இருப்பினும் அங்கே வீடு வாங்கவோ / கட்டவோ ஒரு குடும்பத்திற்கு ரூ. 28 லட்சம் வரை வழங்கப்படும் வீட்டுவசதிக்

கடன். ஆனால், வீட்டின் மொத்த விலை ரூ.35 லட்சத்திற்கு மிகாமல் இருக்கவேண்டும். வங்கி ஊழியர்களுக்கு வீட்டுவசதிக்காக வழங்கப்படும் கடன்கள் இதில் சேராது.

(ii) வீட்டு ரிப்பேர் மற்றும் சிதிலமான வீடுகளை சரிசெய்வதற்காக பெரு நகர்ப்புறங்களில் ரூ. 5 லட்சம் வரையிலும் இதர பகுதிகளில் ரூ. 2 லட்சம் வரையிலும் வழங்கப்படும் கடன்.

(iii) அரசு சார்ந்த முகமைகள் வீடு கட்டுவதற்காக அல்லது குடிசை மாற்று வசதிக்காக, அவர்களின் புனரமைப்பிற்காக வீடுகள் கட்டித் தருவதற்காக ஒரு வீட்டிற்கு ரூ. 10 லட்சம் வரை வங்கிகள் அளிக்கும் கட்டுமானக் கடன்.

(iv) பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினர், குறைந்த வருமானம் உடைய பிரிவினருக்கு வீடு கட்டித் தரும் திட்டங்களுக்கு வங்கிகள் வழங்கும் கடன்கள். இதில் ஒரு குடியிருப்பிற்கான செலவு ரூ. 10 லட்சத்திற்கும் மேல் இருக்கக்கூடாது. நலிவுற்ற குறைந்த வருவாய்ப் பிரிவினரை அடையாளம் காணும் பொருட்டு,வருமான வரம்பு என்பது எந்த இடமாக இருப்பினும் ஒரு குடும்பத்தின் ஆண்டு வருமானம் ரூ. 2 லட்சத்திற்கு மேல் இருக்கக்கூடாது என்று வரையறுக்கப்பட்டுள்ளது.

(v) தேசிய வீட்டுவசதி வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட அரசு சாரா முகமைகளுக்கு குடிசை மாற்று வாரியத்திட்டம் அல்லது குடிசைவாசிகளின் புனரமைப்பிற்காக ஒரு குடியிருப்பிற்கு ரூ. 10 லட்சம் வரைவழங்கப்படும் மறுநிதியுதவி .

(vi) தேசிய வீட்டுவசதி வங்கி (NHB) / ஹட்கோ (HUDCO) ஏப்ரல் 1, 2007க்குப் பிறகு வெளியிடும் பத்திரங்களில் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் செய்திடும் முதலீடுகள் முன்னுரிமைப் பிரிவுக் கடனாக வகைப்படுத்த தகுதியுடையவை அல்ல.

### 6. சமூக உள்கட்டமைப்பு

பள்ளிக்கூடங்கள், சுகாதார நலஅமைப்புகள், குடிநீர் வசதி ஏற்பாடுகள்,இதர சுகாதார அமைப்புகள் (வீடுகளில் கழிப்பறைகள் கட்டுதல், அவற்றை மாற்றியமைத்தல், வீடுகளில் தண்ணீர் வசதிகளுக்கு ஏற்பாடு செய்தல் போன்றவை உட்பட) ஆகியவற்றை டயர் II முதல் டயர் VI மையங்களில் கட்டித் தருவதற்கு அல்லது அவற்றிற்கு உதவிட ஒரு கடனாளிக்கு ரூ. 5 கோடி வரை வழங்கப்படும் வங்கிக்கடன்கள்.

## 7. புதுப்பிக்கத்தக்க சக்தி

சூரிய சக்தியில் இயங்கும் ஜெனரேட்டர்கள், பயோமாஸ் அடிப்படையிலான சக்தி ஜெனரேட்டர்கள், காற்றாலைகள்,நுண் நீர்மின்சக்தித் திட்டங்கள், முறைசாரா சக்தி ஆற்றல் பயன்பாட்டால் ஏற்படுத்தப்படும் பொதுமக்களுக்கான அடிப்படை வசதிகள், உதாரணத்திற்கு, தெரு விளக்குகள், குக்கிராமங்களில் மின்வசதிகள் இவற்றிற்குக் கடனாளிகளுக்கு ரூ.15 கோடி வரை வழங்கப்படும் வங்கிக் கடன்கள். வீடுகளைப் பொறுத்தவரை, இத்தகு வசதிகளுக்காக ரூ.10 லட்சம் வரை ஒரு கடனாளிக்கு வழங்கப்படும் கடன்கள்.

## 8. இதரவகைக் கடனுதவிகள்

8.1 வங்கிகளால் தனிநபர்களுக்கு மற்றும் சுய உதவிக்குழுக்கள் / கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடனுதவிகள் (ரூ. 50,000 வரை). இத்தகு கடனுதவிகளில் கிராமப்புறமானால், அந்தக் கடனாளியின் குடும்ப வருமானம் ரூ. 1,00,000/-ற்கு மிகாமலும், இதர பகுதிகளானால் குடும்ப வருமானம் ரூ.1,60,000–த்திற்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

8.2 நிறுவன அமைப்புகளல்லாதவர்களிடமிருந்து வாங்கிய கடன்களை அடைக்க முடியாமல் நொடித்துப் போன நபர்களுக்கு (III(1.1)A(v)-ல் ஏற்கனவே சேர்க்கப்பட்டுள்ள விவசாயிகள் தவிர) ரூ.1,00,000/- வரை கடன் அடைப்பதற்காக அளிக்கப்படும் நிதியுதவிகள் .

8.3 தாழ்த்தப் பட்டோர் மற்றும் பழங்குடியினருக்காக மாநில அரசு ஆதரவளிக்கும் அமைப்புகளின் பயனாளிகளுக்கு, இடு பொருட்கள் வழங்குதல் அவர்களின் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துதல் என்ற குறிப்பிட்ட நோக்கத்திற்காக வழங்கப்படும் கடனுதவிகள்.

## IV. நலிவுற்ற பிரிவினர்

முன்னுரிமைப் பிரிவுக் கடன்கள், பின்வரும் வகையிலமைந்த கடனாளிகளுக்காக வழங்கப்படுமானால், அவை நலிவுற்ற பிரிவினருக்கான கடனுதவிகளாக வகைப்படுத்தப்படும்.

| எண் | வகை |
|---|---|
| 1. | சிறு மற்றும் குறு விவசாயிகள். |
| 2. | கைவினைஞர்கள், கிராமிய மற்றும் கைத்தொழிலாளர்களுக்கு அளிக்கப்படும் கடன்கள். இவற்றில் தனிநபர் கடன் வரம்பு ரூ. 1 லட்சத்திற்கும் மீகாமல் இருக்கவேண்டும். |
| 3. | அட்டவணை வகுப்பினர் மற்றும் பழங்குடியினர். |
| 4. | சுயஉதவிக் குழுக்கள். |
| 5. | நிறுவன அமைப்புகளல்லாதவர்களிடம் வாங்கிய கடன் சுமையால் நொடித்துப் போன விவசாயிகள். |
| 6. | நிறுவன அமைப்புகளல்லாதவர்களிடம் வாங்கிய கடன் சுமையால் நொடித்துப் போன நபர்கள் (விவசாயிகள் அல்லாதோர்) ஒரு நபரின் கடன் ரூ. 1 லட்சத்திற்கும் மிகாமலிருக்கவேண்டும். |
| 7. | பெண்கள். |
| 8. | திறன் குறைபாடுடை ய நபர்கள். |
| 9. | மிகைப்பற்று (Overdraft) கடன் வசதியின் கீழ் ரூ. 5,000 வரை, பிரதான் மந்திரி ஜன் தன் யோஜனா கணக்குகளுக்கு வழங்கப்படும் கடன்கள். இதில் கடனாளியின் குடும்ப ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் வசிப்பவராயின் ரூ. 1,00,000-ற்கு மிகாமலும் இதர பகுதிகளில் வசிப்பவராயின், ரூ. 1,60,000-ற்கு மிகாமலும் இருக்கவேண்டும். |
| 10. | சிறுபான்மை சமூகத்தினர் (அவ்வப்போது அரசாங்கத்தால் குறிப்பிடப்படும் சமூகத்தினர்). |
| | குறிப்பு – சில மாநிலங்களில் குறிப்பிடப்படும் சிறுபான்மையினர் என்பவர்கள் அதிக எண்ணிக்கையில் உள்ளவர்களானால், மேற்குறிப்பிட்ட (10) என்பது இதர குறிப்பிடப்பட்ட சிறுபான்மையினருக்கு மட்டுமே பொருந்தும். இத்தகு மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்களாவன: ஜம்மு காஷ்மீர், பஞ்சாப், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, லட்சத்தீவு. |

## V. முன்னுரிமைப் பிரிவுக்குக் கடன் வழங்கிய சான்றிதழ்கள்

வங்கிகள் தம்வசம் வாங்கி வைத்துள்ள முன்னுரிமைப் பிரிவுக் கடன் சான்றிதழ்கள் (இருப்பிலுள்ளவை) அந்தந்தப் பிரிவிற்குரிய வகைக்கேற்ப முன்னுரிமைப் பிரிவுக் கடன்களாகக் கருதப்படும். ஆனால் அவற்றின் மூலப்பொருளாக உள்ள சொத்துக்கள் வங்கிகளால் உண்மையிலேயே உருவாக்கப்பட்டவையாக இருக்கவேண்டும். மேலும் அவை இதுபற்றி இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ளஏப்ரல் 7, 2016 தேதியிட்ட முதன்மை சுற்றறிக்கை FIDD.CO.Plan.BC.23/05.09.01/2015-16-ல் குறிப்பிட்டுள்ள வழிகாட்டுதல்களை பூர்த்தி செய்யும் வகையில் அமைத்திடவேண்டும்.

## VI. முன்னுரிமைப் பிரிவு கடன் இலக்குகளை கண்காணித்தல்

முன்னுரிமைப் பிரிவிற்குக் கடன்கள் தொடர்ந்து தடையின்றி கிடைப்பதை உறுதிசெய்யும் வகையில் நகர்ப்புற கூட்டுறவு வங்கிகளின் முன்னுரிமைப் பிரிவுக் கடன் வழங்கல்களை தற்போது உள்ளது போல ஆண்டு அடிப்படையில் கண்காணிப்பதை விடுத்து காலாண்டு அடிப்படையில் கண்காணிக்கப்படும். இதற்கான தகவல் அறிக்கைகள் திருத்தப்பட்ட படிவங்களில் (அறிக்கை I மற்றும் II பகுதி-A முதல் E வரை) நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் காலாண்டு மற்றும் ஆண்டு இடைவெளிகளில் தமக்குரிய இந்திய ரிசர்வ் வங்கியின் பிரதான மண்டல அலுவலகங்களுக்கு அனுப்பிடவேண்டும். இத்தகைய அறிக்கைகள், அவற்றில் குறிப்பிடப்பட்ட முடிவுத் தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் இந்திய ரிசர்வ் வங்கியின் மண்டல அலுவலகத்தை அடையவேண்டும்.

## VII. முன்னுரிமைப் பிரிவுக் கடன்களுக்கான பொதுவான வழிகாட்டுதல்கள்

முன்னுரிமைப் பிரிவைச் சார்ந்த அனைத்து வகைக் கடன்களைப் பொறுத்தவரை வங்கிகள் பின்வரும் பொது வழிகாட்டுதல்களைப் பின்பற்ற வேண்டுவது அவசியமாகும்.

### 1. சேவைக் கட்டணங்கள்

ரூ. 2,000 வரையிலான முன்னுரிமைப் பிரிவு கடன்களுக்கு எந்தவித கடன் தொடர்பான தற்காலிக சேவைக் கட்டணங்கள் அல்லது ஆய்வுக் கட்டணங்களை வங்கிகள் விதிக்கக் கூடாது. சுயஉதவிக் குழுக்கள் / கூட்டுப் பொறுப்புக் குழுக்களுக்கு வழங்கப்படும் கடன்களைப் பொறுத்தவரை, இந்த வரம்பு தனி அங்கத்தினருக்குப் பொருந்தும். மொத்தக் குழுவிற்கானதாக இதைக் கருதக்கூடாது.

### 2. பெறுதல், அனுமதி / மறுத்தல் / பட்டுவாடா பதிவேடுகள்

கடன் விண்ணப்பம் பெறப்பட்ட தேதி / அனுமதிக்கப்பட்ட / மறுக்கப்பட்ட / பட்டுவாடா செய்யப்பட்ட தேதி மற்றும் விவசாயிகள் காரணங்களுடன் பதிவேட்டிலோ, மின்னணு ஊடகம் வாயிலாகவோ பதிவு செய்யப்படவேண்டும். ஆய்வு செய்யவரும் முகமைகளுக்கு எடுத்துக் காட்டக்கூடிய வகையில் இந்தப் பதிவுகள் வைத்திருக்கப்படவேண்டும்.

### 3. கடன் விண்ணப்பங்களுக்கு ஒப்புகை

முன்னுரிமைப் பிரிவுக் கடன் விண்ணப்பங்களைப் பெறும்போது நகர்ப்புற கூட்டுறவு வங்கிகள் ஒப்புகைகள் அளித்திடவேண்டும். வங்கிகளின் நிர்வாக மன்றக்குழு, இக்கடன் விண்ணப்பங்கள் மீதான முடிவுகளை எழுத்துப்பூர்வமாக விண்ணப்பதாரருக்கு அறிவிப்பதற்கு உரிய காலக் கெடுவை நிர்ணயித்திருக்கவேண்டும்.